

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (22.8.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாட்டிற்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள தாய்லாந்து நாட்டு துணைத் தூதர் ரச்சாஅரிபார்க் அவர்கள் (Mr. Racha Aribarg) சந்தித்துப் பேசினார். இச்சந்திப்பின்போது, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பொதுத் துறை செயலாளர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர், தாய்லாந்து வர்த்தக மையத்தின் இயக்குநர் செக் ஜினாபன் (Mr. Chek Jeenaphan Director, Thai Trade Center, Commercial Section), தாய்லாந்து நாட்டு தூதரக அலுவலர்கள் பனுடாஜ் ரஸ்மிடத்தா (Mr. Panutaj Rasmidatta), பிங்பாங்க் சவ்வாசடா (Mr. Pinpong Chauvachata) மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (22.8.2024) தலைமைச் செயலகத்தில், சென்னையைச் சேர்ந்த பன்னிரண்டாம் வகுப்பு பயிலும் மாணவன் கனிஷ் சந்தித்து, Puzzle Cubesல் உலக கின்னஸ் சாதனை படைத்தமைக்காக வாழ்த்துப் பெற்றார். உடன் அவரது பெற்றோர் உள்ளனர்.

### தாராபுரம் என்.சி.பி.நகரவை ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில்

# 700 மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள்!

## அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் வழங்கினார்!

திருப்பூர், ஆக. 24 -

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் என்.சி.பி.நகரவை ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் பள்ளிக் கல்வித்துறையின் சார்பில் 19.08.2024 திங்கட்கிழமை அன்று மாவட்ட வருவாய் அலுவலர் க.கார்த்திகேயன் தலைமையில், தாராபுரம் என்.சி.பி.நகரவை ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் பயிலும் 78 மாணவர்களுக்கும், ஐந்து முனை அரசு மேல்நிலைப்பள்ளியில் பயிலும் 69 மாணவர்களுக்கும், புனித அலோசியஸ் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் பயிலும் 372 மாணவியர்களுக்கும், சி.எஸ்.சி. ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் பயிலும் 44 மாணவர்களுக்கும், சி.எஸ்.சி. பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் பயிலும் 81 மாணவியர்களுக்கும். கோவிந்தாபுரம் மாணிக்கசாமி நாயுடு மேல்நிலைப் பள்ளியில் பயிலும் 56 மாணவ, மாணவியர்களுக்கும் என மொத்தம் 06 அரசு மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் 700 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.33.63 இலட்சம் மதிப்பீட்டிலான விலையில்லா மிதிவண்டிகளை ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர், கழக.மகளிர் அணி துணை செயலாளர் என். கயல்விழி செல்வராஜ் வழங்கினார்.

அமைச்சர் தெரிவித்ததாவது : தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றதலிருந்து பள்ளிக் கல்வித்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக மாணவ, மாணவியர்களின் திறன்களை அறிந்து அவர்களின் வழிகாட்டுதலுக்காக நான் முதல்வன் என்கின்ற சிறப்பான திட்டத்தை செயல்படுத்தி வருகிறார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பள்ளிக் கல்வித்துறையிலும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையில் அதிகம் கவனம் செலுத்தி வருகிறார்கள். ஒன்று அறிவார்ந்த சமூகத்தை உருவாக்குவது, மற்றொன்று ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்குவது, இந்த இரண்டும் நாட்டின் வளர்ச்சிக்கு மிக முக்கிய பங்கு வகிக்கிறது. ஆரம்பப்பள்ளி முதல் அனைத்து பள்ளிகளிலும் எண்ணற்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அரசு பள்ளியில் படிக்கும் மாணவர்களுக்கு புத்தகம், புத்தக பை, சீருடை போன்ற 13 பொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் அனைத்து பள்ளிகளிலும் மதிய உணவு திட்டம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. முதலமைச்சர் அவர்களின் சிறப்பு திட்டங்களில் ஒன்றான முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை விரிவுப்படுத்தி 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் அரசு பள்ளி மாணவர்கள் பயன்பெறும் வகையில் துவக்கி வைத்தார்கள். அனைத்து குழந்தைகளும் சத்துக்குறைவின்றி கல்வி கற்க வேண்டும். கல்வி கற்பது உங்கள் எதிர்கால முதலீடு. எதிர்காலத்தில் போட்டி தேர்வுகளை எதிர்கொள்வதற்காக தற்போது இருந்தே மாணவ, மாணவியர்களாகிய நீங்கள் அதற்கான முயற்சிகளை எடுப்பதன் மூலம் எளிதாக போட்டித் தேர்வுகளை எதிர்கொள்ள முடியும். எந்த விதமான தவறான முடிவுகளையும் மாணவர்கள் எடுத்து விடக்கூடாது. எத்தகைய போட்டித் தேர்வாக இருந்தாலும் சந்திக்கக்கூடிய மனஉறுதியை மனதில் வளர்த்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு உறுதியுடன் இருந்தால் எளிதாக போட்டித் தேர்வில் வெற்றி பெற முடியும். நேரத்தை மிக உபயோகமாக செலவிட வேண்டும்.

இன்று 11 மற்றும் 12 ஆம் வகுப்பு படிக்கும் மாணவ, மாணவியர்களுக்கு மிதிவண்டி வழங்கப்படுகிறது. அனைத்து குழந்தைகளும் கல்வி கற்க வேண்டும் என்பது அவர்களது உரிமை. கல்வி தான் வாழ்வை மேன்மையடைய செய்யும். மேல்நிலை வகுப்புகள் பயின்று வரும் மாணவ, மாணவியர்கள் நாம் என்ன படிக்க வேண்டும் என்று முயற்சி எடுத்தால் அதற்கான அத்தனை வாய்ப்புக்களையும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செய்து தர தயராக உள்ளார்கள். இது போன்ற வாய்ப்புகளை மாணவர்களாகிய நீங்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அனைத்து மாணவர்களும் உயர்கல்வி கற்க வேண்டும் என்ற அடைப்படையில் தாராபுரத்தில் அரசு கலைக்கல்லூரி உருவாக்கப்பட்டது. நமது உரிமையை பெறுவதற்கு கல்வி மிகவும் அவசியம். மாணவர்களாகிய நீங்கள் எதிர்காலத்தை தீர்மானிக்க கூடியவர்களாக இருக்கிறீர்கள். இந்த கால கட்டத்திற்கு ஏற்றார் போல் புதிய தொழில் நுட்பங்களுடன் கூடிய கல்வி முறைகள் மாறி வருகிறது. நமது எதிர்காலத்திற்கு எந்த படிப்பு தேவையோ அதை படித்து வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், தாராபுரம் வருவாய் கோட்டாட்சியர் செந்தில் அரசன், தலைமை செயற்குழு உறுப்பினர் கே.எஸ்.தனசேகர், தாராபுரம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் ஆர். சரஸ்வதி, தாராபுரம் நகர கழக செயலாளர், நகர்மன்ற உறுப்பினர், பொறியாளர் எஸ்.முருகானந்தம், தாராபுரம் நகர்மன்றத் தலைவர், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கு.பாப்புக்கண்ணன், நகர்மன்ற உறுப்பினர்கள் நகர கழக துணை செயலாளர் வி.கமலக்கண்ணன், செரின் பிலோமினா, மாவட்டப் பிரதிநிதி சீனிவாசன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் மீ.உதயக்குமார், திருப்பூர் மாவட்ட கல்வி அலுவலர் பக்தவச்சலம் அவர்கள், தாராபுரம் அரசு மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியை வ.சங்கீதா உள்பட மாவட்ட, நகர, வார்டு கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், மாணவ, மாணவியர்கள், துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



தருமபுரி கிழக்கு மாவட்டம் நல்லம்பள்ளி முன்னாள் ஒன்றிய கழகச் செயலாளர் எச்சனஅள்ளி சண்முகம் இல்ல புதுமனை புகுவிழாவில் தருமபுரி கிழக்கு மாவட்ட கழக செயலாளர் தடங்கம்.பெ.சுப்ரமணி,முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர்.டி.என்.வி.எஸ்.செந்தில்குமார்,நல்லம்பள்ளி துணை சேர்மன் பெரியண்ணன்,ஐ.டி.விங் கௌதம்,உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டனர்.

### தி.மு.க. பொறியாளர் அணி செயலி – புத்தகம் வெளியீடு!

# பொறியாளர் அணி சார்பில் - கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் – பரிசளித்து விழாப் பேருரை!

சென்னை, ஆக. 24 -

தி.மு.க. பொறியாளர் அணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழாவையொட்டி கழகப் பொறியாளர் அணி செயலி (APP) மற்றும் செயல் திட்ட வெளியீட்டு விழா, எஸ்.கே.பி. கருணா எழுதிய ‘கலைஞர் கட்டிய தமிழ்நாடு’ புத்தக வெளியீட்டு விழா, மாநில அளவில் பேச்சுப் போட்டியில் வென்ற மாணவர்களுக்கு பரிசளிப்பு விழா என 3 நிகழ்வுகளாக நாளை (25.08.2024- ஞாயிற்றுக்கிழமை) சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெறுகிறது.

காலை 10 மணியளவில் அனைத்து மண்டலங்களிலும் பேச்சுப்போட்டியில் தேர்வு பெற்ற மாணவர்களுக்கான இறுதிப் போட்டி கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தலைமையில் நடைபெறுகிறது.

இப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு அமைச்சர்கள் மா.சுப்பிர மணியன், பி.கே.சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, மாவட்டச் செயலாளர்கள் நே. சிற்றரசு, மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ., ஆர்.டிசேகர் எம்.எல்.ஏ., மயிலை த. வேலு எம்.எல்.ஏ. ஆகியோர் பரிசளித்து வாழ்த்துகின்றனர்.

மாலை 4 மணியளவில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா – கழக துணைப் பொதுச் செயலாளர் - அமைச்சர் க.பொன்முடி தலைமையிலும் அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன் முன்னிலை யிலும் நடைபெறுகிறது.

‘கலைஞர் கட்டிய தமிழ்நாடு’ புத்தக அறிமுக உரையை கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ. ராசா எம்.பி. ஆற்றுகிறார்.

தி.முக.. பொறியாளர் அணி செயலி மற்றும் புத்தகத்தை வெளியிட்டு, வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசளித்து அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விழாப் பேருரை யாற்றுகிறார்.

இவ்விழாவில் தி.மு.க. பொறியாளர் அணியினர் அனைவரும் பங்கேற்று சிறப்பிக்குமாறு மாநில பொறியாளர் அணித் தலைவர் துரை கி.சரவணன், செயலாளர் எஸ். கே.பி. கருணா இணைச் செயலாளர் அ. வெற்றியழகன் எம்.எல்.ஏ., துணைச் செயலாளர்கள் கு.சண்முகசுந்தரம், வே. உமாகாந்த், இரா. நரேந்திரன், சி.பிரதீப், இரா.ப.பரமேசு குமார் மற்றும் அனைத்து மாவட்ட பொறியாளர் அணி நிர்வாகிகள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

### கோவை தெற்கு மாவட்டம் - சூலூர் சட்டமன்றத் தொகுதி ஊராட்சிகளில்

# இல்லந்தோறும் இளைஞரணி உறுப்பினர் சேர்க்கை முகாம்!

## இருகூர் உதயபூபதி தலைமையில்!

கோவை, ஆக. 24 -

கோவை தெற்கு மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன் வழிகாட்டுதலில் கோவை தெற்கு மாவட்ட கழக இளைஞரணி அமைப்பாளர் கே.வி.கே.எஸ். சபரி கார்த்திகேயன் ஆலோசனையின் பேரில் சூலூர் சட்டமன்ற தொகுதிக் குட்பட்ட தெற்கு ஒன்றியம் கரவெளி மாதப்பூர் தொட்டிபாளையம் ஊராட்சிகளில் பாகம் 66 முதல் 70 வரை முதல் கட்டமாக இல்லந்தோறும் இளைஞரணி உறுப்பினர் சேர்க்கை தெற்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் இருகூர் உதயபூபதி தலைமையில் சூலூர் தெற்கு ஒன்றிய செயலாளர் மன்னவன் முன்னிலையில் நிறைவு பெற்றதை தொடர்ந்து சூலூர் சட்டமன்ற தொகுதிக் குட்பட்ட

தெற்கு ஒன்றியம் பட்டணம் ஊராட்சி பாகம் எண் 203, 204 ல் இல்லந்தோறும் இளைஞர் அணி உறுப்பினர் சேர்க்கை நடைபெற்றது. மேலும் நிறைவு பெற்ற இல்லந்தோறும் இளைஞரணி உறுப்பினர் சேர்க்கை படிவத்தை கரவெளி மாதப்பூர் ஊராட்சி தலைவர் செல்வராஜ் தெற்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் இருகூர் உதயபூபதியிடம் வழங்கினார் .

இந்நிகழ்வில் ஊராட்சி செயலாளர் ஜெயக்குமார்,பொதுக்குழு உறுப்பினர் ரகுதுரைராஜ் தெற்கு மாவட்ட இலக்கிய அணி தலைவர் செல்வக்குமார்

ஒன்றிய அவைத்தலைவர் சன் சுப்ரமணியன் ஒன்றிய பொருளாளர் வடிவேல் மற்றும் ஊராட்சி செயலாளர்கள். செல்வராஜ் , மாவட்டப் பிரதிநிதி ராஜேந்திரன், ஒன்றிய துனைச் செயலாளர் ஞானபிரகாசம், பாகமுகவர்கள் பத்மாவதி, செந்தில்குமார், கனேஷமூர்த்தி, குமார், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கள்ளக்குறிச்சியில் கழக இளைஞரணி சார்பில் நடைபெற்ற கலைஞர் நூற்றாண்டு பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவ மாணவியர்களுக்கு மாவட்ட கழக செயலாளர்கள் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ மற்றும் தா.உதயசூரியன் எம்.எல்.ஏ ஆகியோர் பாராட்டுச் சான்றிதழ் மற்றும் பரிசு பொருட்களை வழங்கினார்கள், அருகில் நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன், ஏ.ஜெ.மணிக்கண்ணன் எம்.எல்.ஏ, மாநில இளைஞரணி துணை அமைப்பாளர் அப்துல் மாலிக் உடன் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திமிரி நா. சீனிவாசன்

### ஆகஸ்ட் 24 (2018)



**தனது இளம் வயதிலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு கழகப் பணியாற்றியவர்**

**இருபது ஆண்டுகளுக்கும் மேலாக திமிரி ஒன்றியக் கழகச் செயலாளராக தொடர்ந்து பணியாற்றியவர். தலைமைச் செயற்குழு உறுப்பினராகப் பொறுப்பு வகித்தவர்.**


**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வழக்கறிஞர் அ.மு. அசன் முகம்மது

### ஆகஸ்ட் 24 (2016)



**இளம் வயதிலேயே திராவிட இயக்கத்தின்மீது பற்று கொண்டு, மாவட்டப் பிரதிநிதி, பொதுக்குழு உறுப்பினர், மாவட்ட வழக்கறிஞர் அணிப் புரவலர் என பல்வேறு பொறுப்புகளை வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**கவிதை, கட்டுரை எழுதுவதில் வல்லவரான இவர், மிசா நெருக்கடி காலத்தில், கழக நாளேடான ‘முரசொலி’யில் துணை ஆசிரியராகப் பணியாற்றியவர்.**

**திருவாரூர் மாவட்டம், அத்திக்கடை ஊராட்சி துணைத் தலைவராக பொறுப்பேற்று அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.**

**இந்தி எதிர்ப்புப் போராட்டம் முதல் கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**